# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 02.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.16900/F/2024**

திரு P. ஆனந்தராவ் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /உதவி மேலாளர் (நியமனம்),
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (விழுப்புரம்) லிட்,
கடலூர் மண்டலம், 58, இம்பிரியல் சாலை, .. பொது அதிகார அமைப்பு
வேல்முருகன் திரையரங்கம் எதிரில், கடலூர் - 607 002.

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 27.03.2024 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 04.05.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 02.05.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 23.12.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (02.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் திரு P. ஆனந்தராவ் என்பவர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு ஆ. சீனிவாசன், உதவி மேலாளர் (நியமனம்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (விழுப்புரம்) லிட், கடலூர் மண்டலம், கடலூர் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், விழுப்புரம் கோட்டம், கடலூர் மண்டலம், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், விருத்தாசலம் கிளை-1 அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், கடலூர் மாவட்டம் விருத்தாசலம் வட்டம், விருத்தாசலம் கிளை-1, அரசு போக்குவரத்து பணிமனையில் அனைத்து பிரிவுகளிலும் பணிபுரியும் பணியாளர்கள் மொத்தம் எத்தனை பேர் மற்றும் அவர்களின் முழு விவரம், மேற்படி போக்குவரத்து பணிமனையில் நகர பேருந்துகள், புறநகர பேருந்துகள், மாற்று பேருந்துகள் எத்தனை என்பது பற்றிய விவரம், பணிமனையில் உள்ள பேருந்துகள் எந்தெந்த மாற்று வழித்தடத்தில் இயக்கப்படுகின்றன, பேருந்துகளை மாற்று வழித்தடங்களில் இயங்க உத்தரவிடும் அரசு போக்குவரத்து துறை அதிகாரியின் முழு விவரம், வழித்தடம் 219-ல் உள்ள விருத்தாசலம் to கடலூர் செல்லும் அரசு பேருந்துகள் வழித்தடங்கள் எத்தனை உள்ளது பழக்கமான வழித்தடங்களில் அரசு பேருந்துகள் இயக்கப்படுகிறதா அல்லது மாற்றி வேறு வழித்தடங்களில் இயக்கப்படுகிறதா, அவ்வாறு கடந்த 2022 ஏப்ரல் முதல் 2024 மார்ச் 26-ஆம் தேதிவரை மாற்றி இயக்கப்பட்ட வழித்தடங்கள் பற்றிய முழு விவரம், விருத்தாசலம் கிளை-1, அரசு போக்குவரத்து பணிமனையில் தற்காலிக ஓட்டுனர்கள், நடத்துனர்கள் மொத்தம் எத்தனை பேர் உள்ளன்ர். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணி மற்றும் தற்காலிக ஓட்டுனர்கள், நடத்துனர்களை பணியமர்த்திய அரசு அதிகாரியின் முழு விவரம், மேலும், தற்காலிக ஓட்டுனர்கள், நடத்துனர்கள் நியமனத்திற்காக பிறப்பித்த அரசாணை உத்தரவின் நகல் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 9 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (02.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு க.எண்.303/பொதஅ/த.நா.அ.போ.க/விகோ/கம/2024-10 நாள் 04.05.2024 தேதியிட்டு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் முழுமையான தகவல்களாக இல்லை என இவ்வாணையம் கருதுகிறது. மேலும், இன்றைய விசாரணையில் மனுதாரர் கலந்து கொள்ளாததால், பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் இறுதி வாய்ப்பு வழங்கி, கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது:-

- மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய தகவல்களை மனுதாரருக்கு முழுமையாக '**தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது**' என்ற முத்திரையுடன்

ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.16900/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / உதவி மேலாளர் (நியமனம்),
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (விழுப்புரம்) லிட்,
கடலூர் மண்டலம், 58, இம்பிரியல் சாலை,
வேல்முருகன் திரையரங்கம் எதிரில்,
கடலூர் - 607 002.

**<u>வழக்கு எண்.SA.16900/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு P. ஆனந்தராவ்,
எண்.A1 குறுக்கு தெரு, கல்லுக்குழி ரோடு,
காவல் நிலையம் அருகில்,
வடலூர், குறிஞ்சிப்பாடி வட்டம்,
கடலூர் மாவட்டம்.

Copy to: File
SNPS / 04.04.2025